بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 51

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

01 ஜமாதில் அவ்வல் 1442 ஹிஜ்ரி கமரி 17 ஃபதஹ் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக்
17 டிசம்பர் 2020

## அல்லாஹ்வின் கட்டளை

وَلِلّٰہِ مَا فِی السَّمٰوٰتِ وَمَا فِی الۡاَرۡضِ ؕ وَکَفٰی بِاللّٰہِ وَکِیۡلًا ۝ اِنۡ یَّشَاۡ یُذۡہِبۡکُمۡ اَیُّہَا النَّاسُ وَیَاۡتِ بِاٰخَرِیۡنَ ؕ وَکَانَ اللّٰہُ عَلٰی ذٰلِکَ قَدِیۡرًا ۝

வானங்களிலும், பூமியிலுமுள்ளவை (எல்லாம்) அல்லாஹ்வுக்கே உரியன. பாதுகாப்பாளனாக விளங்க அல்லாஹ்வே போதுமானவன். மக்களே! அவன் விரும்பினால், உங்களை அழித்துவிட்டு, வேறு மக்களை கொண்டுவந்து விடுவான். அல்லாஹ் அவ்வாறு செய்ய முழு ஆற்றல் பெற்றவனாவான். (4:133,134)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**மருத்துவர்கள் அல்லது சிகிச்சையின் மீது மட்டும் நம்பிக்கை வைப்பது அறிவுடைமை அல்ல. மற்றோர் உலகத்தின் மீதும் ஈமான் உருவாக வேண்டுமென இறைவன் விரும்புகின்றான்**

**அறிவிலி மனிதன் கடுமையான நோய்களால் பீடிக்கப்படும்போது இறைவனை அழைக்கின்றான். ஆயினும் சோதனையை அடிப்படையாகக் கொண்டு அவனுக்கு காலக்கெடு கிடைக்கும்போது அந்நிலையில், தான் மரணிக்கவே போவதில்லை என்பது போன்ற வழிமுறைகளை நிலைநாட்டி, அதற்கான தந்திரங்களையும் மனிதன் மேற்கொள்கிறான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### தவ்பா மற்றும் பாவ மன்னிப்புக் கோருதல் ஆகியவற்றின் மூலமாக வாக்குறுதியளிக்கப்பட்ட முன்னறிவிப்புகள் அகன்று விடுகின்றன

வாக்குறுதியளிக்கப்பட்ட முன்னறிவிப்புகள் தவ்பா (இறைவன் பக்கம் திரும்புதல்) மற்றும் பாவ மன்னிப்புக் கோருதல் ஆகியவற்றின் மூலமாக அகன்று விடுகின்றன. எந்த அளவுக்கு என்றால் நரகத்தின் வாக்குறுதியும் அகன்று விடுகின்றது. மக்கள் இதன் பக்கம் திரும்பி கவனம் செலுத்தினால் அல்லாஹ் விரும்பினால் அந்த நாட்டையும், அந்தப் பகுதியையும் பாதுகாத்து விடுகின்றான். அவன், தான் விரும்புவதை செய்கின்றான். ஆனால் அவன் கூறுகின்றான்:

قُلۡ مَا یَعۡبَؤُا بِکُمۡ رَبِّیۡ لَوۡ لَا دُعَآؤُکُمۡ அதாவது நீர் அவர்களிடம் கூறுவீராக. நீங்கள் பிரார்த்தனை செய்யாவிட்டால், எனது இறைவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். (25:78)

ஒவ்வொரு தெருவிலும், வைத்தியர்களும், மருத்துவர்களும் உள்ளனர். மருத்துவமனைகள் திறக்கப்பட்டுள்ளன. உடனடியாக சிகிச்சை செய்து நலம் பெற்று விடலாமே? என மக்கள் கூறுகின்றனர். எனவே அவர்கள் சிகிச்சை செய்து உடனடியாக நலம் பெற்று விட முடியும். ஆனால் மும்பை மற்றும் கராச்சியில் எத்தனை பெரும் பெரும் மருத்துவர்கள் நோயில் பீடிக்கப்பட்டு உலகத்திலிருந்து சென்றுள்ளார்கள்? என்பது அவர்களுக்கு தெரியாது. இந்த தொண்டிற்காக எவர்கள் நியமிக்கப்பட்டார்களோ அவர்கள் அதே நோய்க்கு இரையாகி விட்டனர். இவ்வாறு இறைன் தனது ஆதிக்கத்தை மக்களுக்கு காட்டுகின்றான். மருத்துவர்கள் அல்லது சிகிச்சையின் மீது மட்டும் நம்பிக்கை வைப்பது அறிவுடைமை அல்ல. மற்றோர் உலகத்தின் மீதும் ஈமான் உருவாக வேண்டுமென இறைவன் விரும்புகின்றான். இப்போது அழுத்தம் கொடுத்து காட்டுங்கள்.

ஓர் அடி நிலத்திற்காக மனிதன் மரணிக்கின்றான். சதித்திட்டம் தீட்டுகின்றான். நீதிமன்ற வழக்குகளை சந்திக்கின்றான். ஆனால் அவன் இறைவனுடைய ஒரு கட்டளையின்படி செயல்படாமல் இருக்கும்போது உள்ளத்தில் அதேபோன்ற கவலையையும், வேதனையையும் தன்னுள் உணர்கின்றானா? ஒருபோதும் இல்லை. அறிவிலி மனிதன் கடுமையான நோய்களால் பீடிக்கப்படும்போது இறைவனை அழைக்கின்றான். ஆயினும் சோதனையை அடிப்படையாகக் கொண்டு அவனுக்கு காலக்கெடு கிடைக்கும்போது அந்நிலையில், தான் மரணிக்கவே போவதில்லை என்பது போன்ற வழிமுறைகளை நிலைநாட்டி, அதற்கான தந்திரங்களையும் மனிதன் மேற்கொள்கிறான்.

தற்போது சாதாரண நோய்களால் இறந்து போனாலும் கூட மிகக் குறைவான தாக்கமே உள்ளத்தில் ஏற்படுகின்றது. இரண்டு மூன்று நாட்கள் வரை பெயரளவில் தாக்கம் இருக்கின்றது. பின்னர் அதே சிரிப்பும், கேலியும் (திரும்பி விடுகின்றது). மண்ணறைகளுக்கு செல்கின்றார்கள். இறந்தவர்களை அடக்கம் செய்கின்றனர். ஆனால் இறுதியில் ஒரு நாள் நாமும் இறைவனிடத்தில் செல்ல வேண்டும் என்பதை ஒருபோதும் சிந்திப்பதில்லை. சாதாரண மரணங்களால் எந்த தாக்கமும் ஏற்படுத்துவதில்லை என்பதை இறைவன் கண்டுள்ளான். எனவே இறைவன் இரண்டாவது வழிமுறையை கையாண்டுள்ளான். பிளேக் மூலமாக மக்களை எச்சரிக்கை செய்ய விரும்புகின்றான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 233,234 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு நபர் ஜுமுஆ நாளன்று (பள்ளிவாசலுக்கு) வந்தார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குத்பா வழங்கிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நீங்கள் தொழவில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு அவர், இல்லை என்றார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், (எழுந்திருங்கள்) இரண்டு ரக்அத் தொழுங்கள் என்று கூறினார்கள்.

(சஹீஹ் புகாரி தொகுதி 2 பாடம் அல்ஜுமுஆ, ஹதீஸ் எண் 931)

எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபாக்களான ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸிமாக் பின் ஹரஷா (அபூ துஜானா) – (ரலி) ஆகியோரைப் பற்றி நற்குறிப்பு**

**பாகிஸ்தான் பெஷாவரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மஹ்பூப் கான் சாஹிப் ஷஹீத், பாகிஸ்தானின் முரப்பி மதிப்பிற்குரிய ஃபஹர் அஹ்மது ஃபரஹ் சாஹிப் மற்றும் அவர்களது மகனான இஹ்திஷாம் அஹ்மது அப்துல்லாஹ் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த மதிப்பிற்குரிய டாக்டர் அப்துல் கரீம் சாஹிப் ஆகியோரின் நற்குறிப்பை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறி அவர்களது ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்**

ஸய்யதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 13 நவம்பர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **13 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

இன்று பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களைப் பற்றி எடுத்துரைக்கப்படும். அதற்கு முன் நான் ஒரு விஷயத்தைப் பற்றி விளக்க விரும்புகிறேன். இரண்டு குத்பாக்களுக்கு முன் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. அதில் முஸ்னது அஹ்மது பின் ஹம்பலின் அறிவிப்பு இடம்பெற்றிருந்தது. பிளேக் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறும்போது, வெகு விரையில் நீங்கள் சிரியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்வீர்கள். அது உங்கள் கைகளால் வெற்றி கொள்ளப்படும். ஆனால் அங்கு கொப்பளம், கட்டி போன்ற ஒரு நோய் உங்களை சூழ்ந்து கொள்ளும். அது மனிதனை ஏணியின் முனையில் பிடிக்கும் என்று கூறினார்கள். இதனுடைய மொழியாக்கம் சரியாக கூறப்படவில்லை. தவறாக உள்ளது. இதனால் விஷயமும் தெளிவாகவில்லை. ஆகவே சரியான மொழியாக்கத்துடன் இதன் ரிவாயத்தை மீண்டும் எடுத்துரைக்கிறேன்.

இஸ்மாயீல் பின் உபைதில்லாஹ்விடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூற நான் கேட்டுள்ளேன். அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் சிரியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்வீர்கள். அது உங்களுக்காக வெற்றி கொள்ளப்படும். உங்களிடையே ஒரு நோய் வெளிப்படும். அது கொப்பளம் அல்லது கடுமையாக கடிக்கக்கூடிய ஒன்றைப்போன்று இருக்கும். அது மனிதனுடைய தொப்புளின் கீழ் பகுதியில் வெளிப்படும்.

ஏணியின் முனையில் பிடித்துக் கொள்ளும் என்று முன்பு செய்யப்பட்ட மொழியாக்கம் தவறாகும். சரியான மொழியாக்கம் என்னவென்றால், மனிதனுடைய தொப்புளின் கீழ் பகுதியில் அது வெளிப்படும். அதாவது தொப்புளின் கீழே கால்களுக்கு மேலே உடலின் நடுப்பகுதியில் ஒரு கட்டி வெளிப்படும். அதன் மூலமாக அல்லாஹ் மக்களுக்கு ஷஹாதத்தை வழங்குவான். அதன் மூலமாக அவர்களுடைய செயல்களை தூய்மைப்படுத்துவான் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதை தொடர்ந்து, ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள், அல்லாஹ்வே! இந்த வார்த்தைகளை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து முஆஸ் பின் ஜபல் கேட்டதை நீ அறிந்திருந்தால், அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் இதில் பெரும் பங்கை வழங்குவாயாக என்று துஆ செய்தார்கள். எனவே அவர்கள் அனைவருக்கும் பிளேக் வந்தது. எந்த அளவுக்கு என்றால், அவர்களில் ஒருவர் கூட அதில் தப்பிக்கவில்லை. அன்னாரது ஆட்காட்டி விரலில் ஒரு கட்டி தோன்றியது. இதற்கு பதிலாக எனக்கு செந்நிற ஒட்டகம் கிடைத்தாலும், நான் ஒருபோதும் மகிழ்ச்சி அடைய மாட்டேன் என்று ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 371 முஸ்னத் முஆஸ் பின் ஜபல் ஹதீஸ் எண் 22439 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

இதுவே திருத்தப்பட்ட மொழியாக்கமாகும். வெளியிடப்பட்ட அல் ஃபஸ்ல் பத்திரிகையில் திருத்தப்பட்டு விட்டது. இவ்விஷயத்தை உங்கள் முன்னால் எடுத்து வைக்க நான் விரும்பினேன்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டு வந்தது. அவரைப் பற்றிய சம்பவங்கள் ஆரம்பிக்கின்றன. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: உஹது போர் நாளன்று எனது தந்தையின் உடல் சிதைக்கப்பட்ட நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வரப்பட்டது. அதாவது உடல் உறுப்புகள் வெட்டப்பட்டிருந்தன. குறிப்பாக காதும், மூக்கும் வெட்டப்பட்டிருந்தன. அன்னாரது உடல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் வைக்கப்பட்டது. நான் அவருடைய முகத்திலிருந்து துணியை எடுக்க முனைந்தேன். மக்கள் என்னைத் தடுத்தனர். அப்பொழுது ஒரு பெண் ஓலமிடும் சப்தத்தை மக்கள் கேட்டனர். அது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்களின் மகள் ஃபாத்திமா பின்த் அம்ர் ஆவார் என்று ஒருவர் கூறினார். அந்தப் பெண் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்களின் சகோதரி ஆவார் என்றும் கூறப்படுகிறது. அப்போது அழ வேண்டாம்! வானவர்கள் தொடர்ச்சியாக அவர் மீது தனது இறக்கைகளை கொண்டு நிழலிட்டுக் கொண்டிருக்கின்றனர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபதில் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 954,955, அப்துல்லாஹ் பின் அம்ர் – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: உஹது நாளன்று எனது தந்தை கொண்டு வரப்பட்டபோது, எனது மாமி அதைக் கண்டு அழுதார்கள். நானும் அழ ஆரம்பித்தேன். மக்கள் என்னை தடுத்தனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை தடுக்கவில்லை. பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் அவருக்காக அழுதாலும் சரி! அழவில்லையென்றாலும் சரி! அல்லாஹ்வின் மீது ஆணையாக!

நீங்கள் அவரை அடக்கம் செய்யும் வரை வானவர்கள் தொடர்ச்சியாக அவர் மீது தமது இறக்கைகளால் நிழலிட்டுக் கொண்டிருந்தனர் என்று கூறினார்கள்.

(அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபதில் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 956, அப்துல்லாஹ் பின் அம்ர் – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

உஹதுப் போர் ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகையைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. மிக அதிகமான அளவில் கருத்து வேறுபாடு காணப்படுகின்றன. புகாரியுடைய ரிவாயத்தில் ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போர் ஷஹீதுகளை இரண்டிரண்டு பேர்களாக ஒரே துணியில் ஒன்றாக வைப்பார்கள். இவர்களில் திருக்குர்ஆனை அதிகம் அறிந்தவர் யார்? என்று கேட்பார்கள். அவர்களில் ஒருவர் சுட்டிக் காட்டப்பட்டதும், பெருமானார் (ஸல்) அவர்கள், அவரின் உடலை பக்கவாட்டில் குழியில் முதலில் வைப்பார்கள். அதாவது கபரில் முதலில் அவர் வைக்கப்படுவார். மேலும், மறுமை நாளில் இவர்களுக்கு நானே சாட்சி ஆவேன் என்று கூறிவிட்டு, அவர்களின் இரத்தத்துடனேயே அவர்களை அடக்கம் செய்யும்படி உத்தரவிடுவார்கள். அவர்கள் நீராட்டப்படவுமில்லை; அவர்களின் ஜனாஸா தொழுகையும் தொழப்படவுமில்லை. இது புகாரியுடைய அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜனாயிஸ், பாபுஸ் ஸலாத் அலஷ் ஷஹீத், ஹதீஸ் எண் 1343)

புகாரியுடைய இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் (ரலி) அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நாள் வந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் உஹது போர் ஷஹீதுகளின் ஜனஸாவை தொழ வைத்தார்கள்.

புகாரியுடைய இன்னோர் அறிவிப்பில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போர் ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகையை உஹது போருக்கு எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தொழ வைத்தார்கள் என்று வந்துள்ளது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜனாயிஸ், பாபுஸ் ஸலாத் அலஷ் ஷஹீத், ஹதீஸ் எண் 1344 & சஹீஹ் புகாரி, கிதாபுல் மகாஸி, பாப் கஸ்வத்துல் உஹது, ஹதீஸ் எண் 4042)

சுனன் இப்னி மாஜாவில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: உஹது போர் ஷஹீதுகள் பெருமானார் (ஸல்) அவர்கள் முன் கொண்டு வரப்பட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், பத்து பத்து ஷஹீதுகளின் ஜனாஸாக்களை தொழ வைத்தார்கள். மேலும் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் உடல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகிலேயே இருக்கும். மற்ற ஷஹீதுகளின் உடல்கள் கொண்டு செல்லப்பட்டன.

(சுனன் இப்னி மாஜா, கிதாபுல் ஜனாயிஸ், பாபு ஜாஅஃபிஸ் ஸலாத் அலா ஷுஹதா வதஃப்னைன்ம் ஷஹீத், ஹதீஸ் எண் 1513)

சுனன் அபீ தாவூதில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கிறார்கள்: உஹது போர் ஷஹீதுகள் நீராட்டப்படவில்லை; அவர்களது இரத்தத்துடன், அதாவது காயத்துடன் அவர்கள் அடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களில் எவருடைய ஜனாஸ தொழுகையும் தொழ வைக்கப்படவில்லை.

(சுனன் அபீ தாவூது, கிதாபுல் ஜனாயிஸ், பாப் ஃபிஷ் ஷஹீத் யக்ஸில் ஹதீஸ் எண் 3135)

சுனன் அபீ தாவூதுடைய இன்னோர்அறிவிப்பில், ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களைத் தவிர வேறு எந்த ஷஹீதுடைய ஜனாஸாவையும் தொழ வைக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

(சுனன் அபீ தாவூது, கிதாபுல் ஜனாயிஸ், பாப் ஃபிஷ் ஷஹீத் யக்ஸில் ஹதீஸ் எண் 3137)

சுனன் திர்மிதியின் அறிவிப்பில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போர் ஷஹீதுகளின் ஜனாஸாவை தொழ வைக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் ஜனாயிஸ்.... ஹதீஸ் எண் 1016)

சீரத் இப்னு ஹிஷாம் மற்றும் சீரத் ஹல்பியாவில் எழுதப்பட்டுள்ளதென்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உஹது ஷஹீதுகளின் ஜனாஸாவை எவ்வாறு தொழ வைத்தார்கள் என்றால், முதலில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஜனாஸாவை தொழ வைத்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் அதில் ஏழு தக்பீர்களைக் கூறினார்கள்.

சீரத் ஹல்பியாவைப் பொருத்தவரையில் நான்கு தக்பீர்கள் என்று கூறப்பட்டுள்ளது. அதன் பிறகு மற்ற ஷஹீதுகள் ஒவ்வொருவராக கொண்டு வரப்பட்டனர். மேலும் அவர்களின் ஜனாஸா ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஜனாஸாவோடு வைக்கப்படும். பெருமானார் (ஸல்) அவர்கள், அவ்விருவருக்கும் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பார்கள். இவ்வாறு அனைத்து ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகையை ஒரு முறையும், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகையை 72 முறையும், சிலரைப் பொருத்தவரை 92 முறையும் தொழ வைத்தார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 395,396 கஸ்வா உஹது... – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது & அஸ்ஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2 பக்கம் 337 பாப் திக்ர் முகாஸிய்யா – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தலாயிலுன் நுபுவ்வா எனும் வாழ்க்கை வரலாறு நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் உடலின் அருகே ஒன்பது ஷஹீதுகளின் உடல்கள் மொத்தமாக கொண்டு வரப்படும். அதன் பிறகு அவர்களின் ஜனாஸா தொழுகை நடத்தப்படும். பிறகு அந்த ஒன்பது நபர்களின் உடல்கள் கொண்டு செல்லப்படும். அதன் பிறகு இன்னும் ஒன்பது ஷஹீதுகள் கொண்டு வரப்படுவார்கள். இவ்வாறே அனைத்து ஷஹீதுகளுடைய ஜனாஸா தொழுகையும் தொழ வைக்கப்பட்டது. ஒவ்வொரு முறையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏழு தக்பீர்களைக் கூறினார்கள்.

(தலாயிலுன் நபவிய்யா, தொகுதி 3 பக்கம் 287... – 2002 ஆம் ஆண்டு பைருத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சீரத் ஹல்பியா மற்றும் தலாயிலுன் நுபுவ்வாவில் உஹது போர் ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகையைப் பற்றிய ஷஹீதுகளைக் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. அந்த இரு நூல்களிலும் ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் அவர்களின் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உஹது போர் ஷஹீதுகளை அவர்களின் இரத்தத்துடனேயே அடக்கம் செய்யும்படி உத்தரவிட்டார்கள். அவர்கள் நீராட்டப்படவுமில்லை; அவர்களின் ஜனாஸா தொழுகையும் தொழ வைக்கப்படவில்லை என்று வந்துள்ளது.

(தலாயிலுன் நபவிய்யா தொகுதி 3 பக்கம் 288,287... – 2002 ஆம் ஆண்டு பைருத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2 பக்கம் 338 பாப் ஸிக்ர் முகாஸிய்யா – 2002 ஆம் ஆண்டு பைருத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சஹீஹ் புகாரி, கிதாபுல் ஜனாயிஸ் பாப் ஸலாத் அலஷ் ஷஹீத், ஹதீஸ் எண் 1343)

ஹஸ்ரத் இமாம் ஷாஃபி அவர்கள் அறிவிக்கிறார்கள்: அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போர் ஷஹீதுகளின் ஜனாஸாவை தொழ வைக்கவில்லை என்ற விஷயம் தொடர்ச்சியாக பல அறிவிப்புகளிலிருந்து உறுதியாகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஷஹீதுகளின் ஜனாஸாவை தொழ வைத்தார்கள் என்றும், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகையில் எழுபது தக்பீர்கள் கூறினார்கள் என்றும் வருகின்ற அறிவிப்புகள் சரியாகனதாகத் தெரியவில்லை. ஹஸ்ரத் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்கள் எட்டு வருடங்களுக்குப் பிறகு அந்த ஷஹீதுகளின் ஜனாஸாவை தொழ வைத்தார்கள் என்று வருகின்ற ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்களின் அறிவிப்பில் இந்த சம்பவம் 8 ஆண்டுகளுக்குப் பிறகு நடந்ததாக கூறப்பட்டுள்ளது.

(ஃபத்ஹுல் பாரி ஷரஹ் சஹீஹ் புகாரி அஸ் அல்லாமா இப்னு ஹஜர் அஸ்கலானீ தொகுதி 3 பக்கம் 249 – 1986 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

நான் ஏற்கனவே கூறியதுபோன்று பல விவாதங்கள் நடந்துள்ளன. மேலும் சில விஷயங்களையும் இத்துடன் நான் கூறி வருகிறேன். இரண்டு ஹதீஸுகளை எடுத்து வைத்தார்கள். முதல் ஹதீஸ் ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் தெளிவாக கூறப்பட்டிருப்பது என்னவென்றால், உஹது போர் ஷஹீதுகளை நீராட்டவுமில்லை; அவர்களுக்காக ஜனாஸா தொழுகையும் தொழ வைக்கப்பவுமில்லை என்று உள்ளது. இன்னொரு ஹதீஸ் ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

أَنَّ النَّبِيَّ ﷺ خَرَجَ يَوْمًا فَصَلَّى عَلَى أَهْلِ أُحُدٍ صَلَاتَهُ عَلَى الْمَيِّتِ

ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்தார்கள். உஹது ஷஹீதுகளுக்கு ஜனாஸா தொழுகையைப் போன்று தொழ வைத்தார்கள். இந்த ஹதீஸ்தான் புகாரியிலும் உள்ளது. இன்னோரிடத்தில் உஹது போர் பாடத்திலும் வந்துள்ளது; அங்கும் இந்த ஸஹாபிதான் அறிவிக்கிறார்கள்.

صَلَّى رَسُولُ اللَّهِ عَلَى قَتْلَى أُحُدٍ بَعْدَ ثَمَانِي سِنِينَ كَالْمُوَدِّعِ لِلْأَحْيَاءِ وَالْأَمْوَاتِ

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது ஷஹீதுகளுக்காக எட்டு வருடங்களுக்குப் பிறகு எவ்வாறு தொழ வைத்தார்கள் என்றால், உயிருள்ளவர்களையோ அல்லது இறந்தவர்களையோ வழியனுப்பி வைப்பதுபோல் தொழ வைத்தார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜனாயிஸ், பாப் ஸலாத் அலஷ் ஷஹீத், ஹதீஸ் எண் 1343,1344) & சஹீஹ் புகாரி, கிதாபுல் மகாஸி, பாப் கஸ்வா உஹது, ஹதீஸ் எண் 4042)

இவ்வாறே அல்லாமா இப்னு ஹஜர் அஸ்கலானி அவர்கள் இமாம் ஷாஃபி அவர்களின் இக்கூற்றை குறித்து கூறும்போது இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்: அதாவது, இமாம் ஷாஃபி அவர்கள் கூற வந்த விஷயம் என்னவென்றால், எந்த ஒருவருடைய மரணத்திலும் நீண்ட காலம் கழிந்த பிறகு அவருடைய கபரில் ஜனாஸா தொழ வைக்கப்படாது. இமாம் ஷாஃபியைப் பொருத்தவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தமது மரணம் நெருங்கிவிட்டதை அறிந்து, அன்னார் (ஸல்) அவர்கள் அந்த ஷஹீதுகளுடைய கபர்களுக்கு சென்று அவர்களுக்கு பிரியாவிடை கொடுத்தவாறு அவர்களுக்காக துஆ செய்தார்கள். அவர்களுக்காக மன்னிப்பை வேண்டினார்கள்.

(ஃபத்ஹுல் பாரி ஷரஹ் சஹீஹ் புகாரி அஸ் அல்லாமா இப்னு அஸ்கலானி, தொகுதி 3 பக்கம் 249 – 1986 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

உஹது ஷஹீதுகளின் கஃபன் மற்றும் நல்லடக்கம் குறித்து எடுத்துரைத்தவாறு சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: உடல்களைக் கண்டறிந்த பிறகு கஃபன் பொதியும் பணி ஆரம்பித்தது. ஷஹீதுகளின் உடலில் இருக்கக்கூடிய உடையை அவ்வாறே இருக்கச் செய்யுமாறும், ஷஹீதுகளை நீராடச் செய்ய வேண்டாம் என்றும், கஃபனுக்காக வேறு துணி இருக்கும் என்றால் அதை ஷஹீதுகளின் ஆடையின் மேல் போர்த்தி விடும்படியும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருவருக்கு உத்தரவிட்டார்கள். அந்நேரத்தில் ஜனாஸா தொழுகையும் தொழ வைக்கப்படவில்லை. ஆகவே நீராட்டப்படாமல் ஜனாஸா தொழ வைக்கப்படாமல் ஷஹீதுகள் அடக்கம் செய்யப்பட்டார்கள். பொதுவாக ஒரே துணியில் இரண்டு சஹாபாக்கள் ஒன்றாக கஃபனிடப்பட்டு ஒரே கபரில் ஒன்றாக அடக்கம் செய்யப்பட்டனர். எந்த சஹாபிக்கு திருக்குர்ஆன் அதிகமாக தெரியுமோ அவரை கபரில் வைக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க முன்னுரிமை வழங்கப்பட்டது. ஆனால் பிற்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது மரணத்திற்கு சற்று முன் குறிப்பாக உஹது போர் ஷஹீதுகளின் ஜனாஸாவை தொழ வைத்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் பல்வேறு வரலாற்று நூல்களிலிருந்து இந்த முடிவுக்கு வந்துள்ளார்கள். அதாவது தொழ வைத்திருக்கலாம் அல்லது துஆ செய்திருக்கலாம். எவ்வாறிருப்பினும் மிக வேதனையுடன் அவர்களுக்காக ஜனாஸா தொழுகை தொழவும் வைத்தார்கள். மிக வேதனையான உள்ளத்துடன் அவர்களுக்காக துஆவும் செய்தார்கள்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) – பக்கம் 501–502)

ஏற்கனவே கூறப்பட்டது போன்று அவர்களுக்காக துஆ செய்திருக்கலாம். ஒவ்வொருவருடைய கபருக்கும் சென்று மிக வேதனையுடன் அவர்களுக்காக துஆ செய்தார்கள். ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் எனது தந்தைக்காக உஹது போர் கழிந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் கபர் ஏற்படுத்தினேன். அவர்களை அதில் அடக்கம் செய்தேன். அப்போது நான் அவர்களுடைய உடலில் எந்த மாற்றத்தையும் காணவில்லை. அவர்களுடைய தாடியின் சில முடிகள் நிலத்துடன் ஒட்டியிருந்தன.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபதிஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 344 அப்துல்லாஹ் பின் அம்ர் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்னோரிடத்தில் ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: உஹது போரின்போது ஒரே கபரில் இருவர் அடக்கம் செய்யப்பட்டிருந்தனர். என்னுடைய தந்தையுடனும் ஒரு சஹாபி அடக்கம் செய்யப்பட்டிருந்தார். ஆறு மாதங்கள் கடந்த பிறகு எனது தந்தையை தனி கபரில் தனியாக அடக்கம் செய்ய வேண்டும் என எனது உள்ளம் நாடியது. ஆகவே நான் அவரை கபரிலிருந்து வெளியே எடுத்தபோது அவருடைய சதையில் சிறிது மாற்றத்தைத் தவிர பூமி அவருடைய உடலில் வேறு எந்த ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 425 அப்துல்லாஹ் பின் அம்ர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உஹது போருக்கு 46 வருடங்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அமீர் முஆவிய்யா அவர்கள் தமது கிலாஃபத் காலகட்டத்தில் நதி நீர் ஓட பாதை அமைத்தார்கள். அதனுடைய நீர் உஹது போர் ஷஹீதுகளின் கபர்களில் நுழைந்து விட்டது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஹ் (ரலி) ஆகியோரின் கபர்களிலும் தண்ணீர் நுழைந்து விட்டது. அவர்களுடைய கபர் தோண்டப்பட்டபோது அவர்கள் மீது இரண்டு துணிகள் கிடந்தன.

இந்த ரிவாயத்தை கூறக்கூடியவர் கூறுகிறார்: அவர்களுடைய முகத்தில் காயம் இருந்தது. அவர்களுடைய கை அவர்களின் காயத்தின் மேல் இருந்தது.

பிறகு அடுத்து வரும் அறிவிப்பு நிச்சயமாக கேள்விக்குரியயதாகும். அதை நான் எடுத்துரைக்கிறேன். அது நம்பத்தகுந்ததாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

**திருக்குர்ஆனிலிருந்து...**

மார்க்கத்தைப் பொய்ப்படுத்துபவனை நீர் அறிந்து கொண்டீரா? அவனே அநாதையை விரட்டுகிறான். மேலும் ஏழைகளுக்கு உணவளிக்குமாறு அவன் தூண்டுவதில்லை. (107:2–5)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

ஏனென்றால் சில வரலாற்று நூல்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. சிலர் அதை படிக்கவும் செய்கின்றனர். ஆகவே இங்கு அதை எடுத்துரைப்பதன் நோக்கம் என்னவென்றால், இதில் கொஞ்சம் மிகைப்படுத்துதல் இருக்க வாய்ப்புண்டு என்று கூறவே!

அறிவிப்பாளர் கூறுகிறார்: காயத்திலிருந்து கை எடுக்கப்பட்டபோது காயத்திலிருந்து இரத்தம் வழிந்தோடியது. (இதற்கு சாத்தியமில்லை) அவர்களுடைய கைகளை திரும்ப காயத்தின் மீது எடுத்து வைத்தபோது இரத்தம் வழிவது நின்று விட்டது. இவ்வாறான அறிவிப்புகளும் இடையில் வருகின்றன. இவை சந்தேகத்திற்குரியவை மற்றும் நம்ப முடியாதவை ஆகும்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் கபரில் எனது தந்தையை கண்டபோது அவர் தூங்குவது போல் தென்பட்டார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 424 அப்துல்லாஹ் பின் அம்ர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & கிதாபுல் மகாஸி தொகுதி 1 பக்கம் 267 – 1984 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆறு மாதங்களுக்குப் பிறகு அவரை வெளியே எடுத்தபோது சதையில் கொஞ்சம் வித்தியாசம் இருந்தது என்று கூறினார்கள். அப்படி இருக்கும்போது 46 ஆண்டுகளுக்கு பிறகு எலும்புகள் மட்டுமே எஞ்சியிருக்காமல், மாற்றம் எதுவுமே ஏற்படவில்லை என்று கூறுவது சாத்தியமற்ற விஷயமாகும். இது இயற்கைச் சட்டமாகும். உடலில் மாற்றம் ஏதும் ஏற்படாமல் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை சந்தித்தபோது, ஜாபிரே! நீங்கள் துயரத்துடன் இருப்பதாக நான் காண்கிறேன். என்ன விஷயம்? என்று கேட்டார்கள். நான் அன்னார் (ஸல்) அவர்களிடம், எனது தந்தை உஹது போரில் ஷஹீதாகி விட்டார்கள். அவர் கடனையும், சந்ததிகளையும் விட்டுச் சென்றுள்ளார் என்று கூறினேன்.

அல்லாஹ் உனது தந்தையை சந்தித்த நற்செய்தியை பற்றி உமக்கு நான் கூறட்டுமா? என்று பெருமானார் (ஸல்) அவர்கள், கேட்டார்கள். அதற்கு கூறுங்கள் என்று நான் பதிலளித்தேன். அல்லாஹ் திரைக்குப் பின்னால் அன்றி எவரிடமும் பேசியதில்லை. அனைவரிடத்திலும் திரைக்குப் பின்னால் இருந்தே உரையாடுவான். ஆனால் அல்லாஹ் உனது தந்தையை உயிர் பெறச் செய்த பிறகு அவருக்கு முன்னால் நின்று அவருடன் உரையாடினான். அவரிடம், என்னுடைய அடியானே! என்னிடம் கேள். நான் தருகிறேன் என்றான். உனது தந்தை, என் இறைவா! என்னை மீண்டும் உயிர்த்தெழச் செய்வாயாக; நான் உனது வழியில் மீண்டும் கொல்லப்பட வேண்டும் என்றார்.

இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள், எனது இறைவா! நான் உன்னை வணங்குவதன் உரிமையை செலுத்தவில்லை. எனது விருப்பம் என்னவென்றால், நீ என்னை மட்டும் உலகிற்கு அனுப்பி வைப்பாயாக. நான் உனது நபி (ஸல்) அவர்களுடன் இணைந்து உன் வழியில் போரிட வேண்டும்; மேலும் உன் வழியில் மீண்டும் கொல்லப்பட வேண்டும் என்று கூறினார்கள். அப்போது எவர் ஒரு முறை இறந்து விட்டாரோ அவர் மீண்டும் உலகிற்கு திரும்ப அனுப்பப்பட மாட்டார் என்று நான் தீர்மானித்து விட்டேன் என்று இறைவன் கூறினான். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்விடத்தில், என் இறைவா! எனக்குப் பின்னால் இருக்கக்கூடியவர்களிடம் இவ்விஷயத்தை கூறிவிடுவாயாக என்று இறையஞ்சினார். அப்போது இறைவன் இந்த வசனத்தை இறக்கினான்:

وَلَا تَحْسَبَنَّ الَّذِينَ قُتِلُوا فِي سَبِيلِ اللَّهِ أَمْوَاتًا بَلْ أَحْيَاءٌ عِنْدَ رَبِّهِمْ يُرْزَقُونَ (3:170)

அல்லாஹ்வின் வழியில் கொல்லப்பட்டவர்களை மரணித்தவர்கள் என்று நீங்கள் ஒருபோதும் எண்ண வேண்டாம். மாறாக அவர்கள் உயிரோடு உள்ளனர். அவர்களுக்கு அவர்களின் இறைவனிடத்தில் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

(தலாயிலுன் நபவிய்யா தொகுதி 3 பக்கம் 298... – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபதில் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 955,956, அப்துல்லாஹ் பின் அம்ர் – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

இந்த வசனத்தை இதற்கு முன்பும் கூட ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் தொடர்பாக கூறியிருக்கிறேன். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்களுடன் அல்லாஹ் உரையாடும் சம்பவத்தைப் பற்றிய விளக்கத்தை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கிலாஃபத்திற்கு முந்தைய தமது ஒரு சொற்பொழிவில் கூறியுள்ளார்கள்.

அன்னார் கூறுகிறார்கள்: இந்த சம்பவத்தில் அனைத்து விதமான அழகும் நிறைந்துள்ளது. எந்த பக்கத்திலிருந்து இதை பார்த்தாலும் இது ஒரு புதிய நயத்தை காட்டுகிறது. இதர விஷயங்களைத் தவிர இதிலிருந்து நமக்குத் தெரிய வருகின்ற விஷயம் என்னவென்றால், எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தொடர்பு தொடர்ச்சியாக இறைவனிடம் இருந்தது என்று தெரிய வருகிறது. அடியார்களின் மீதும் பரிவு காட்டினார்கள். இறைவனிடமும் உள்ளத்தை இணைத்து வைத்திருந்தார்கள். ஒருபுறம் தனது தோழர்களின் பக்கம் சாய்ந்திருந்தது; இன்னொருபுறம் மிக உயர்வான தோழனுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார்கள்.

அன்னார் அமைதியின் நிலையில் ثُمَّ دَنَا فَتَدَلّٰى இறைவனுக்கு மிக நெருக்கமாக மேலே சென்றார்கள்; போரின்போது ஒரு நொடி கூட விலகி இருக்கவில்லை. போர்க்களத்தை ஒரு கண் கண்காணித்துக் கொண்டிருந்தது என்றால், இன்னொரு கண் அழகிய தோழனின் காட்சியை காண்பதில் மூழ்கியிருந்தது. ஒரு காது கருணையினால் சஹாபாக்களின் பக்கம் சாய்ந்திருந்தது என்றால், இன்னொரு காது உயரிய வானவர்களிடமிருந்து தனது இறைவனின் இனிய சொற்களை கேட்பதில் மூழ்கியிருந்தது. அன்னாரது கை நிரம்பியிருந்தது. உள்ளம் வலிமையாக இருந்தது.

பெருமானார் (ஸல்) அவர்கள், சஹாபாக்களுக்கு ஆறுதல் வழங்கிக் கொண்டிருந்தார்கள். இறைவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் நல்கிக் கொண்டிருந்தான். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்களின் மனநிலையைப் பற்றி தகவல் அளித்ததன் மூலம், அல்லாஹ் அன்னாருக்கு இந்த செய்தியைக் கூறிக் கொண்டிருந்தான். அதாவது எல்லாரையும் விட அதிகமாக என்னை நேசிப்பவரே! என்னுடைய அடியார்களின் உள்ளத்தில் உமது நேசத்தையும் நாம் நிரப்பி விட்டோம். நிலையற்ற உலகத்திலிருந்து மறைந்து சென்ற பிறகும் கூட, உமது ஞாபகம் அவர்களை நிம்மதியிழக்கச் செய்கிறது. மேலும் உம்மை போர்க்களத்தில் தனியாக விட்டுச் சென்றதன் காரணமாக எந்த அளவுக்கு வருத்தப்படுகிறார்கள் என்றால் உமக்கு பகரமாக அவர்களுக்கு சொர்க்கத்திற்கான ஆசை கூட அவர்களுக்கு இல்லை. அவர்களுடைய சொர்க்கம் என்னவென்றால், கூரிய வாளால் மீண்டும் மீண்டும் வெட்டப்பட வேண்டும்; உம்முடன் இருக்க வேண்டும்; மீண்டும் உம்முடன் இருக்க வேண்டும். மீண்டும் உம்முடன் இருக்க வேண்டும் என்பதேயாகும்.

(குத்பாத்தே தாஹிர் (தகாரீர் ஜல்ஸா ஸாலானா கப்ல் அஸ் கிலாஃபத்) 1979 ஆம் ஆண்டு ஜல்ஸா ஸாலானாவில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு, பக்கம் 349,350)

**திருக்குர்ஆனிலிருந்து...**

தங்கள் தொழுகையில் கவனமற்றவர்களாகத் தொழுபவர்களுக்கும் அழிவுதான். (மக்களுக்குக்) காட்டவே அத்தகையோர் விரும்புகின்றனர். அவர்கள் அற்ப நன்மைக்குரிய செயல்களை(க்கூட) தடுத்து விடுகின்றனர். (107:5–8)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் இறந்தபோது அவர்களுக்கு கடன் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் உதவி செய்யும்படி நான் வேண்டினேன். அதாவது, கடன் கொடுத்தவர்களிடம் கடனில் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுமாறு தாங்கள் அவர்களுக்கு அறிவுறுத்துங்கள என்று கேட்டுக் கொண்டேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அம்மக்களிடத்தில் இந்த விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். ஆனால் அவர்கள் குறைத்துக் கொள்ளவில்லை. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம், உமது பேரீச்சம் பழங்களை ரகங்களின் அடிப்படையில் தனித்தனியாக பிரித்து வையுங்கள். அஜ்வா பேரீச்சம் பழங்களை தனியாக எடுத்து வையுங்கள். அஸ்க் பின் ஸைது வைகப் பேரீச்சம் பழங்களை தனியாக பிரித்து வையுங்கள். பிறகு எனக்கு தகவல் சொல்லி அனுப்புங்கள் என்றார்கள்.

ஆகவே நான் அவ்வாறே செய்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சொல்லி அனுப்பியிருந்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் வந்தார்கள். அன்னார் பேரீச்சம் பழங்குவியலுக்கு மீதோ அல்லது அதன் மத்தியிலோ அமர்ந்தார்கள். பின்னர் பெருமானார் (ஸல்) அவர்கள், அம்மக்களுக்கு நிறுத்துக் கொடுக்குமாறு கூறினார்கள். ஆகவே நான் அம்மக்களுக்கு நிறுத்து கொடுத்தேன். எதுவரை என்றால் அவர்களின் உரிமையை முழுவதுமாக நான் கொடுத்து விட்டேன். அவ்வாறிருந்தும் எனது பேரீச்சம் பழங்கள் எஞ்சிவிட்டன. அவற்றில் சிறிதும் குறையாததுபோல் தென்பட்டது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் புயூஹ்.... ஹதீஸ் எண் 2127)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் தமக்குப் பின்னால் தமது மகன் ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்களைத் தவிர, ஆறு மகள்களை விட்டுச் சென்றார்கள். புகாரியின் ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் தமக்குப் பின்னால் ஏழு அல்லது ஒன்பது பெண் பிள்ளைகளை விட்டுச் சென்றுள்ளார்கள் என்று வருகிறது.

(சுனன் நிஸாயி, கிதாபுல் வஸாயா... ஹதீஸ் எண் 3666 & புகாரி, கிதாபுன் நஃப்காத்.... ஹதீஸ் எண் 5367)

அடுத்ததாக எடுத்துரைக்கப் போகும் சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அபூ துஜானா சிமாக் பின் கரஷா ஆகும். ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளைக் கோத்திரமான பனூ ஸாயிதாவைச் சேர்ந்தவர் ஆவார். ஹஸ்ரத் அபூ துஜானாவின் தந்தையின் பெயர் கரஷா ஆகும். ஆனால், தந்தையின் பெயர் அவ்ஸ் என்றும், பாட்டனார் பெயர் கரரூ என்றும் சிலர் கூறுகிறார்கள். ஹஸ்ரத் அபூ துஜானாவின் தயாருடைய பெயர் ஹுஸ்மா பின்த் ஹர்மாலாவாகும். அன்னார் தமது பெயரை விட தமது சுட்டுப் பெயரான அபூ துஜானா என்ற பெயரில் அதிக பிரபல்யமாக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூ துஜானாவிற்கு ஒரு மகன் இருந்தார். அவருடைய பெயர் காலித் என்பதாகும். அந்த மகனுடைய தாயாரின் பெயர் ஆமினா பின்த் அம்ர் ஆகும்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 419 அபூ தஜானா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 317 ஸிமாக் பின் ஹரஷா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

### திருக்குர்ஆனிலிருந்து...

(நபியே) நிச்சயமாக நாம் உமக்கு மிகுதி(யான நன்மை)யினை வழங்கியுள்ளோம். எனவே நீர் (நன்றி தெரிவிக்க) உமது இறைவனை நீர் (மிகுதியாக) தொழுது, தியாகம் செய்வீராக. நிச்சயமாக உமது பகைவனே, ஆண் சந்ததியற்றவன். (108:2–4)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

ஹஸ்ரத் உத்பா பின்த் கஸ்வான் (ரலி) மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனா சென்றடைந்தபோது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவருக்கும் ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்களுக்குமிடையே சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 420 அபூதஜானா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் பத்ர், உஹது உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றிருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 317 ஸிமாக் பின் ஹரஷா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அன்ஸாரின் பெரும் சஹாபாக்களுள் ஒருவராக கணக்கிடப்படுகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போர்களில் இவருக்கு பெரும் அந்தஸ் கிடைத்திருந்தது.

(அல்இஸ்திஆப் ஃபி மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 212 ஸிமாக் பின் ஹரஷா – 2010 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

போர் நடைபெறும்போது ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் மிகவும் வீரத்தை வெளிப்படுத்துவார்கள். அன்னார் மிகச் சிறந்த குதிரை வீரராக இருந்தார். அவரிடம் சிவப்பு நிறத்திலான ஒரு கைக்குட்டை இருக்கும். போரின்போது மட்டுமே அதை அவர்கள் தலையில் கட்டிக் கொள்வார்கள். அவர் சிவப்பு கைக்குட்டையை தலையில் அணிந்து கொள்ளும்போது, அவர் போருக்காக ஆயத்தமாகி விட்டார் என மக்கள் அறிந்து கொள்வர். ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள் தைரியமிக்க வீரர்களில் ஒருவராக கருதப்பட்டார்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபதிஸ் ஸஹாபா தொகுதி 5 பக்கம் 96 அபூதஜானா, ஸிமாக் பின் ஹரஷா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

முஹம்மது பின் இப்ராஹீம் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் போரில் தனது சிவப்பு தலைப்பாகையின் காரணமாக அடையாளம் காணப்பட்டார்கள். பத்ர் போரிலும் அது அன்னாரின் தலையில் இருந்தது.

மேலும் முஹம்மது பின் உமர் அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள் உஹது போரிலும் அவ்வாறே கலந்து கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உறுதியாக நின்றார்கள். மேலும் அன்னாருடன் மரண பிரமாணம் செய்திருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 420 அபூ துஜானா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உஹது போர் நாளன்று ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) மற்றும் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவ்ரகளை முழுவதுமாக பாதுகாத்தார்கள். ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள் கடுமையாக காயமடைந்தார்கள். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அந்நாளில் ஷஹீதாகி விட்டார்கள்.

(அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துஸ் ஸஹாபா தொகுதி 4 பக்கம் 209 அபூதுஜானா – 2010 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது நாளில் ஒரு வாளைப் பிடித்தவாறு, مَنْ يَأْخُذُ مِنِّي هَذَا؟ அதாவது இதை என்னிடமிருந்து யார் பெற்றுக் கொள்வார்? என்று கேட்டார்கள். எல்லாரும் வாங்குவதற்கு கை நீட்டினார்கள். நான் வாங்கிக் கொள்கிறேன் என்று அவர்களில் ஒவ்வொருவரும் கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இதனுடைய உரிமையை கொடுத்து யார் பெறுவார்? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அப்போது மக்கள் பின்வாங்கி விட்டார்கள். ஹஸ்ரத் சிமாக் பின் கரஷா அபூ துஜானா அவர்கள், நான் அதை அதனுடைய உரிமையை கொடுத்து வாங்கிக் கொள்கிறேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அவர்கள் வாளை வாங்கினார்கள். மேலும் இணை வைப்போரின் தலைகளை வெட்டி வீழ்த்தினார்கள். இது முஸ்லிமுடைய ஹதீஸாகும்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஃபஸாயிலுஸ் ஸஹாபா, பாப் மின் ஃபஸாயில் அபீ துஜானா, ஸிமாக் பின் ஹரஷா, ஹதீஸ் எண் 6353)

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள், இந்த வாளுக்குரிய உரிமை என்ன? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இதைக் கொண்டு எந்த முஸ்லிமையும் கொல்லக்கூடாது; இந்த வாள் இருக்கும்போது எந்தவொரு காஃபிரையும் எதிர்கொண்டு நிற்கும்போது ஓடிவிடக்கூடாது என்று கூறினார்கள். அதாவது உறுதியாக நின்று போரிட வேண்டும். இதைக்கேட்ட ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள், நான் இந்த வாளின் உரிமையை நிறைவேற்றுபவனாக வாங்கிக் கொள்கிறேன் என்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்களுக்கு வாளைக் கொடுத்தபோது அதைக் கொண்ஒடு அவர்கள் இணை வைப்பவர்களின் தலையை வெட்டி வீழ்த்தினார்கள். அச்சந்தர்ப்பத்தில் அவர்கள் இக்கவிதைகளை கூறினார்கள்:

أَنَا الَّذِیْ عَاهَدَنِیْ خَلِیْلِیْ وَنَحْنُ بِالسَّفْحِ لَدَی النَّخِیْلِ
اَنْ لَّا أَقُوْمَ الدَّهْرَ فِیْ الْکَیُوْلِ أَضْرِبْ بِسَیْفِ اللهِ وَالرَّسُوْلِ

ஸஃபா என்னுமிடத்தில் பேரீச்ச மரங்களின் அருகில் என்னுடைய நண்பர் என்னிடமிருந்து வாக்குறுதி வாங்கினார். அந்த வாக்குறுதி என்னவென்றால், படையின் பிற்பகுதியில் நான் நிற்க மாட்டேன் என்பதும், அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் வாளால் எதிரிகளுடன் போரிடுவேன் என்பதுமாகும்.

ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள் பொறுமையுடன் நடந்தவாறு எதிரிகளின் படை வரிசையின் நடுவில் நின்றார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல) அவர்கள் கூறினார்கள்:

اِنَّ هٰذِهٖ مِشْيَةٌ يُبْغِضُهَا اللهُ عَزَّوَجَلَّ اِلَّا فِيْ هٰذَا الْمُقَامِ

இது எவ்வாறான நடை என்றால், அல்லாஹ் வெறுக்கக்கூடிய ஒன்றாக உள்ளது; ஆனால் இந்த சந்தர்ப்பத்தைத் தவிர. அதாவது போரின்போது இவ்வாறு நடக்கலாம்.

(அல் அஸாபா ஃபீ தமீஸில் ஸஹாபா தொகுதி 7 பக்கம் 100 அபூதுஜானா அன்ஸாரி – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் ஸஹாபா தொகுதி 2 பக்கம் 317 ஸிமாக் பின் ஹரஷா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு வாளை எடுத்துக்காட்டி, مَنْ يَأْخُذُ هٰذَا السَّيْفَ بِحَقِّهٖ அதாவது எவர் இந்த வாளை இதனுடைய உரிமையைக் கொடுத்து வாங்கிக் கொள்வார்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் எழுந்து நின்றேன். யா ரஸூலல்லாஹ்! நான் உள்ளேன் என்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை தவிர்த்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் இந்த வாளை யார் இதனுடைய உரிமையுடன் வாங்கிக் கொள்வார்? என்று கேட்டார்கள். நான் மீண்டும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் உள்ளேன் என்றேன். அன்னார் மீண்டும் என்னை தவிர்த்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் ஒரு முறை, யார் இந்த வாளை இதனுடைய உரிமையுடன் வாங்கிச் செல்வார்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அபூ துஜானா சிமாக் பின் கரஷா அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் இந்த வாளை இதனுடைய உரிமையுடன் வாங்கிக் கொள்கிறேன். இதனுடைய உரிமை என்ன? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இதனைக் கொண்டு எந்த முஸ்லிமையும் கொல்லக் கூடாது; இது இருக்கும்போது எந்தவொரு காஃபிரையும் பார்த்து ஓடி விடக்கூடாது; உறுதியாக நின்று போரிட வேண்டும் என்றார்கள்.

ஹஸ்ரத் ஸுபைர் அவர்கள் கூறுகிறார்கள்: அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாளை ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்களிடம் கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் போருக்கு செல்ல விருப்பம் கொண்டால், சிகப்பு கைக்குட்டையை தலையில் அணிந்து கொள்வார்கள். ஹஸ்ரத் ஸுபைர்(ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இன்று இந்த வாளினுடைய உரிமையை எவ்வாறு இவர் கொடுக்கிறார் என்று நான் பார்ப்பேன் என் கூறிக் கொண்டேன்.

ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அபூ துஜானாவுக்கு முன்னால் யார் வந்தாலும், அவர் அந்நபரைக் கொன்றார். வெட்டி வீழ்த்தியாவறு முன்னேறிச் சென்றார். எந்த அளவு சென்றார் என்றால், எதிரணியை கடந்து சென்று மலையின் அடிவாரத்தில் முரசு அடித்து கொண்டிருந்த எதிரிகளின் பெண்கள் இருந்த பகுதிக்கு சென்று விட்டார். அவர்களில் ஒரு பெண் இவ்வாறு கவிதைகள கூறிக் கொண்டிருந்தாள். அதனுடைய மொழியாக்கம் என்னவென்றால், மேகங்களில் பயணிக்கக்கூடிய அதிகாலை நட்சத்திரத்தின் பிள்ளைகளாவோம் நாங்கள். நீங்கள் (எதிரிகளை பிளந்து சென்று) முன்னேறினால் நாங்கள் உங்களை வரவேற்போம். சாய்ந்து அமர தலையணைகளை வைத்துக் கொடுப்போம். நீங்கள் புறமுதுகிட்டால், அன்பிலார் பிரிவதைப் போன்று நேசமின்றி உங்களைப் பிரிந்து விடுவோம்.

ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் ஒரு பெண்ணின் மீது வாள் வீசுவதற்கு கையை உயர்த்தினார்கள். பிறகு தம்மை தடுத்துக் கொண்டார்கள். போர் முடிந்தவுடன் நான் அவரிடம் சென்று, இன்று நான் உம்முடைய யுத்தத்தையும் கண்டேன். நீங்கள் ஒரு பெண்ணின் மீது கையை உயர்த்திய பிறகு கீழே இறக்கி விட்டீர்களே! அதற்கு என்ன காரணம்? என கேட்டேன். அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாளுக்கு கண்ணியமளித்தேன். அதைக் கொண்டு ஒரு பெண்ணைக் கொல்வதா? அவ்வாறு நடக்காது! ஒரு பெண்ணை கொல்வதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாளை உபயோகப்படுத்தக்கூடாது என்று தடுத்துக் கொண்டேன் என்றார்கள்.

இன்னொரு அறிவிப்பில், அந்தப் பெண் அபூ ஸுஃப்யானின் மனைவி ஹிந்தா அவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. அவர் மற்ற பெண்களுடன் சேர்ந்து பாடிக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் தமது வாளை உயர்த்தியபோது, அப்பெண் உதவிக்காக உரத்த குரல் எழுப்பினாள். ஆனால் எவருக்கும் உதவிக்கு வரவில்லை. ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள் தமது வாளை கீழே இறக்கி விட்டார்கள். மேலும் திரும்பி வந்து விட்டார்கள். ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் கேட்டபோது, ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாளைக் கொண்டு உதவிக்கு யாருமற்ற ஒரு பெண்ணைக் கொலை செய்வதை நான் விரும்பவில்லை.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்ஹைன் தொகுதி 3 பக்கம் 440,441 கிதாப் மஃரூஃபதிஸ் ஸஹாபா, ஸிக்ர் மனாகிப் அபீதுஜானா, அறிவிப்பு எண் 5088 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ துஜானாவுடைய இச்சம்பவம் குறித்து எடுத்துரைத்தவாறு சீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: தனிநபர் போரில் குரைஷிய காஃபிர்கள் தோல்வியை காண நேர்ந்தபோது, கோபத்தில் வீழ்ந்து போருக்கான அறிவிப்பை செய்தார்கள். முஸ்லிம்களும் தக்பீர் முழக்கமிட்டு முன்னேறினார்கள். இரண்டு படைகளும் தங்களுக்குள் மோதிக் கொண்டன. அநேகமாக அந்தச் சந்தர்ப்பத்தில்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வாளை கையில் ஏந்தியவாறு, எவர் இதனை பெற்றுக் கொண்டு இதனுடைய உரிமையை நிறைவேற்றுவார்? எனக் கேட்டார்கள். பல சஹாபாக்கள் பெருமை கிடைக்கும் என்ற ஆவலில் தமது கைகளை உயர்த்தினார்கள். அவர்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) ஆகியோரும் அடங்குவர்.

சில அறிவிப்புகளின் அடிப்படையில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) ஆகியோரும் இருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கையை தடுத்து வைத்துக் கொண்டார்கள். இதனுடைய உரிமையை கொடுக்கக்கூடிய எவராவது இருக்கிறார்களா? எனக் கேட்டுக் கொண்டே சென்றார்கள். இறுதியில் ஹஸ்ரத் அபூ துஜானா அன்ஸாரி அவர்கள் தமது கையை நீட்டினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்குத் தாருங்கள் என்று கேட்டார்கள். வாளை பெருமானார் (ஸல்) அவர்கள் அவருக்கு வழங்கினார்கள். ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள் அதை கையில் ஏந்தியவாறு கர்வத்தோடு நடந்தார்கள். அதாவது பெருமிதத்தோடு நடந்தவாறு காஃபிர்களின் பக்கம் முன்னேறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம், இறைவனுக்கு இந்த நடை பிடிக்காது; ஆனால் இவ்வாறான சந்தர்ப்பத்தில் விருப்பமற்றதாக இருக்காது என்றார்கள்.

ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாளை வாங்க எல்லாரையும் விட அதிக விருப்பம் கெண்டவராக இருந்தார்கள். நெருங்கிய உறவு முறையின் காரணமாக தனது உரிமை என்றும் அதிகமாக நினைத்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு இந்த வாளை ஏன் தரவில்லை? ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்களுக்கு கொடுத்துள்ளார்கள்: இதற்கு என்ன காரணம் இருக்க முடியும்! என தனது உள்ளத்தில் நிம்மதி இழந்திருந்தார்கள். எனது இந்த துன்பத்தை நீக்க இந்த களத்தில் நான் அவருடன் இருப்பேன். அவர் இந்த வாளைக் கொண்டு என்ன செய்கிறார் என்று பார்ப்பேன் என தனது உள்ளத்தில் உறுதி கொண்டிருந்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் தனது தலையில் சிவப்பான ஒரு துணியை கட்டினார்கள். மேலும் அந்த வாளை ஏந்தியவாறு, புகழ் பாடியவாறு இணைவைப்போரின் படை வரிசைகளுக்குள் நுழைந்து விட்டார்கள். அவர் எங்கெல்லாம் செல்கிறார்களோ அங்கெல்லாம் மரணத்தை நிகழ்த்தியவாறு சென்றார்கள். அவருக்கு முன்னால் ஒருவர் வந்து, அவர் தப்பிச் சென்றதாக நான் பார்க்கவில்லை. அன்னார் குரைஷிய படையை கிழித்தவாறு முன்னேறி, படையின் பிற்பகுதிக்கு சென்று விட்டார்கள். அங்கு குரைஷியர்களின் பெண்கள் நின்று கொண்டிருந்தார்கள். அபூ ஸுஃப்யானின் மனைவியாகிய ஹிந்த் உரத்த குரலில் தமது ஆண்களை உத்வேகப்படுத்திக் கொண்டிருந்தார். அப்பெண் ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்களுக்கு முன்னால் வந்து விட்டாள். அபூ துஜானா தமது வாளை அவளுக்கு முன்னால் உயர்த்தினார்கள். அப்போது ஹிந்த் பெரும் உரத்த குரலில் ஓலமிட்டார். மேலும் தமது ஆண்களை உதவிக்கு அழைத்தார். ஆனால் எந்த மனிதரும் அவருக்கு உதவி செய்ய வரவில்லை.

ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஆனால் நான் கண்டது என்னவென்றால், ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள் தாமாகவே தமது வாளை கீழே இறக்கினார்கள். அங்கிருந்து விலகி வந்தார்கள். அச்சந்தர்ப்பத்தில் நான் அபூ துஜானாவிடம், முதலில் தங்கள் வாளை உயர்த்திய பிறகு கீழே இறக்கி விட்டீர்களே! என்ன ஆயிற்று? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாளை ஒரு பெண்ணின் மீது வீச எனது உள்ளம் நாடவில்லை. அப்பெண்ணும் எப்படிப்பட்ட நிலையில் இருந்தாள் என்றால், அந்த நேரத்தில் அப்பெண்ணை பாதுகாக்கக்கூடிய எந்த ஆணும் அவளுடன் இல்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸுபைர் அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களுடைய வாளுக்கு ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் செலுத்திய உரிமையை ஒருவேளை என்னால் செலுத்த முடியாமல் போயிருக்கலாம் என அப்போதுதான் நான் புரிந்து கொண்டேன். எனது உள்ளத்திலிருந்த மன வருத்தம் நீங்கியது.

(சீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 489,490)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இச்சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள். அன்னார் கூறுகிறார்கள்: உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு வாளை ஏந்தியவாறு, எவர் இந்த வாளுக்குரிய உரிமையை கொடுப்பதாக வாக்குறுதி அளிப்பாரோ அவருக்கு இந்த வாளை நான் கொடுப்பேன் என்று கூறினார்கள். பலர் அந்த வாளை வாங்க எழுந்து நின்றனர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த வாளை அபூ துஜானா அன்ஸாரிக்கு வழங்கினார்கள். போரில் ஓரிடத்தில் மக்காவசிகளின் சில படை வீரர்கள், ஹஸ்ரத் அபூ துஜானாவின் மீது தாக்குதல் தொடுத்தனர். அன்னார் அவர்களுடன் போரிட்டுக் கெண்டிருக்கும்போது, ஒரு படைவீரன் மிகத்தீவிரமாக சண்டையில் பங்கெடுப்பதைக் கண்டார்கள். வாளை ஏந்தியவாறு தாக்க சென்றார்கள். ஆனால் பிறகு அவனை ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டார்கள். அதாவது, அபூ துஜானா அவர்கள் வாளேந்தி அவன் பக்கம் பாய்ந்தார்கள். ஆனால் அவனை விட்டு விட்டு திரும்பி விட்டார்கள். அவனை நீங்கள் ஏன் விட்டீர்கள்? என அவரிடம் ஒரு நண்பர் கேட்டார்.

பதிலளிக்கும் வண்ணம் அன்னார் கூறினார்கள்: நான் அவனிடம் சென்றபோது அவனது நாவிலிருந்து எவ்வாறான சொற்றொடர் வெளிப்பட்டது என்றால் அதைக்கேட்ட நான், அவர் ஆண் அல்ல; பெண் என்பதை உணர்ந்து கொண்டேன். அவரது நண்பர், எவ்வாறாயினும் அப்பெண் படை வீரர்களைப் போன்று போரிட்டுக் கொண்டிருந்தாள். பிறகு நீங்கள் ஏன் கொல்லவில்லை? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் வழங்கப்பட்ட வாளை ஒரு பலவீனமான பெண்ணின் மீது வீசுவதை எனது உள்ளம் பொறுத்துக் கொள்ள இயலாது என்று கூறினார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் உதவியும் வெற்றியும் வரும்பொழுது, மேலும் அல்லாஹ்வின் மார்க்கத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக இணைவதை நீர் காணும்பொழுது, நீர் உமது இறைவனைப் புகழ்ந்து, அவனது தூய்மையினை எடுத்துரைத்து, அவனுடைய மன்னிப்பைத் தேடுவீராக. நிச்சயமாக அவன் தொடர்ந்து கருணை காட்டுபவனாவான். (110:2–4)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பிறகு எழுதுகிறார்கள்: சுருக்கமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெண்களுக்குரிய மரியாதை மற்றும் கண்ணியம் குறித்து எப்போதும் போதித்து வந்திருக்கிறார்கள். அதன் காரணமாக காஃபிர்களின் பெண்கள் அதிக துணிவோடு முஸ்லிம்களுக்கு நஷ்டமிழைக்க முயற்சி செய்து வந்துள்ளனர். அப்படி இருந்தும் கூட முஸ்லிம்கள் அவ்விஷயங்களை பொறுத்துக் கொண்டு வந்துள்ளனர்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 2 பக்கம் 421,422)

ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்களைக் குறித்து மிகப் பிரபல்யமனா கிழக்கத்திய ஆராய்ச்சியாளரான வில்லியம் மூர் எழுதுகிறார்கள்: போரின் ஆரம்பத்தில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தனது வாளை எடுத்தார்கள். இதனுடைய உரிமையுடன் இதை யார் வாங்கிக் கொள்வார்? என்று கேட்டார்கள். உமர், ஸுபைர் போன்ற பல சஹாபாக்கள் அதனை வாங்க ஆசைப்பட்டனர். ஆனால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மறுத்து விட்டார்கள். இறுதியில் அபூ துஜானா அவர்கள் கேட்டபோது, ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அவருக்கு கொடுத்து விட்டார்கள். அவர் அதைக் கொண்டு காஃபிர்களின் தலையை உடலிலிருந்து துண்டிக்க தொடங்கி விட்டார்கள்.

(LIFE OF MAHOMET by Sir William Muir, Pg: 269 Smith Elder & Co, Waterloo Place London 1878)

பிறகு அவர் கூறுகின்றார்: முஸ்லிம்களின் கடும் தாக்குதலால் மக்கத்து படையின் பாதம் தடுமாறியது. இஸ்லாமியப் படையின் இடப்பக்கமாக பின் புறமிருந்து தாக்குதல் தொடுக்கலாம் என குரைஷியர்களின் குதிரைப்படை பல முறை முயற்சி செய்தது. முஹம்மது (ஸல்) அவர்கள் அங்கு குறிப்பாக 50 வில்லாளிகளின் தாக்குதலை வாங்கிக் கொண்டு ஒவ்வொரு முறையும் அவர்கள் பின்வாங்க நேர்ந்தது.

பத்ர் போரில் முஸ்லிம்கள் காட்டிய அந்த துணிவு, வீரம் மற்றும் மரணத்தையும் அபாயத்தையும் பொருட்படுத்தாத நிலை உஹதிலும் காட்டப்பட்டது. இரும்பு தலைகவசத்துடன் சிவப்பு கைக்குட்டையை அணிந்தவாறு ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் தாக்குதல் தொடுக்கும்போது மக்கத்து படையின் வரிசைகள் நொறுங்கிப் போயின. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் வழங்கிய வாளைக் கொண்டு தாக்கும்போது நாலாபுறமும் மரணங்கள் சம்பவித்தன. ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் நெருப்புக்கோழியின் இறகால் ஆன மகுடம் அணிந்து எல்லா புறமும் தெளிவாக தென்பட்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தமது நீளமான வெள்ளைக் கொடியுடனும், ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் அழகிய மின்னக்கூடிய மஞ்சள் தலைப்பாகையுடனும் Elite Force ஐப் போன்று எங்கு சென்றாலும் எதிரிகளுக்கு மரணம் மற்றும் துன்பத்தின் தூதை தம்முடன் எடுத்துச் சென்றார்கள். இது எத்தகைய காட்சி என்றால் இதிலிருந்து பிற்காலத்து இஸ்லாமிய வெற்றிகளின் கதாநாயகர்கள் பயிற்சிப் பெற்றனர். (சீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 490)

### திருக்குர்ஆனிலிருந்து...

(அழிவு) காலத்தின் மேல் ஆணையாக! நிச்சயமாக, மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான். ஆயினும் நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்து, உண்மையைக் கொண்டு ஒருவருக்கொருவர் அறிவுரை கூறி, பொறுமையுடன் செயலாற்றுமாறு ஒருவருக்கொருவர் அறிவுரை கூறி வருபவர்களைத் தவிர (அவர்கள் என்றும் இழப்பிற்காளாக மாட்டார்கள். (103:2–4)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

நான் கூறிய இவை அனைத்தும் சீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூலில் விவரிக்கப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போரிலிருந்து திரும்பிய பிறகு தனது மகள் ஃபாத்திமாவிடம் தனது வாளைக் கொடுத்தார்கள். மகளே! இதில் உள்ள இரத்தத்தை கழுவி விடு என்றார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் தமது வாளை அவர்களிடத்தில் கொடுத்து, அதில் உள்ள இரத்தத்தை கழுவி விடுமாறு கூறியவாறு, அல்லாஹ்வின் மீது ஆணையாக! இன்று இது என்னுடன் முழுமையாக உழைத்தது என்றார்கள். அதைக்கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீர் இன்று போரின் உரிமையை செலுத்தியதை போலவே ஹஸ்ரத் ஸஹ்ல் பின் ஹுனைஃபும், ஹஸ்ரத் அபூ துஜானாவும் போரின் உரிமையை செலுத்தினார்கள் என்று கூறினார்கள். இன்னோர் அறிவிப்பில் ஹஸ்ரத் ஸஹ்ல் பின் ஹுனைஃபுக்கு பதிலாக ஹஸ்ரத் ஹாரிஸ் பின் சிம்மாஹ் அவர்களின் பெயர் வந்துள்ளது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபதிஸ் ஸஹாபா தொகுதி 2 பக்கம் 317 ஸிமாக் பின் ஹரஷா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 420 அபூதுஜானா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸைது பின் அஸ்லம் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அபூ துஜானா உடல்நலமின்றி இருந்தபோது மக்கள் அவரிடத்தில் வந்தார்கள். ஆனால் அன்னாரின் முகம் மிகப் பொலிவுடன் இருந்தது. உங்களுடைய முகம் ஏன் பொலிவாக உள்ளது? என்று ஒருவர் கேட்டார். ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள், என்னைப் பொருத்தவரை என்னுடைய செயல்களுள் இரண்டு செயல்கள் மிக கடினமானவையாகவும், உறுதியானவையாகவும் உள்ளன. ஒன்று, எனக்கு சம்பந்தமற்ற பேச்சை நான் ஒருபோதும் பேசியது கிடையாது. இரண்டாவது, எனது உள்ளம் முஸ்லிம்களுக்காக எப்பொழுதும் தூய்மையாக உள்ளது என்றார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 420 அபூதுஜானா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் யமாமா போரில் ஷஹீதானார்கள். பொய்யன் முஸைலமா பொய் நபித்துவ வாதம் செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு மதீனாவின் மீது படை எடுக்க விரும்பினான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவனை ஒடுக்குதவற்காக ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டில் படையை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்களும் அப்படையில் பங்கெடுத்தார்கள். அவர்கள் யமாமா போரில் கடுமையாகப் போரிட்டார்கள். ஷஹாதத் எனும் அந்தஸ்தை அடைந்தார்கள். பனூ ஹனீஃபா (இது பழமையான அரபு கோத்திரம் ஆகும். அதன் பெரும் பகுதி முஸைலமாவின் தலைமையின்கீழ் மதீனாவிற்கெதிராக கிளர்ச்சி செய்தது) கோத்திரத்திற்கு, யமாமாவில் தோட்டம் இருந்தது. அதனுள் இருந்து கொண்டு அவர்கள் போரிட்டு வந்தனர். உள்ளே நுழைவதற்கு முஸ்லிம்களுக்கும் வாய்ப்பு கிடைக்காமல் இருந்தது. என்னை தோட்டத்திற்குள் தூக்கி வீசி விடுங்கள் என்று ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் முஸ்லிம்களிடம் கூறினார்கள். முஸ்லிம்களும் அவ்வாறே செய்தனர். ஆனால் வேறொரு பக்கம் விழுந்ததன் காரணமாக அன்னாருடைய கால் உடைந்து விட்டது. அப்படியிருந்தும் அன்னார் தோட்டத்தின் கதவருகே போரிட்டுக் கொண்டிருந்தார்கள். இறுதியில் இணைவைப்பவர்களை அங்கிருந்து அகற்றி விட்டார்கள். முஸ்லிம்கள் உள்ளே நுழைந்து விட்டார்கள். பொய்யன் முஸைலமாவைக் கொல்வதில் அப்துல்லாஹ் பின் ஸைது மற்றும் வஹ்ஷீ பின் ஹரபுடன் அபூ துஜானாவும் இணைந்திருந்தார்கள். யமாமா நாளில் அன்னார் ஷஹீதானார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 420 அபூதுஜானா அன்ஸாரி – 2010 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்திஸ் ஸஹாபா தொகுதி 2 பக்கம் 318 ஸிமாக் பின் ஹரஷா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 4 பக்கம் 209 அபூதுஜானா அன்ஸாரி – 2010 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் சிஃப்ஃபீன் அல்லது சிஃப்பீன் போரில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சார்பாக போரிட்டவாறே மரணமடைந்தார்கள். ஆனால் இந்த அறிவிப்பு பலவீனமானதாக உள்ளது. முதலில் கூறப்பட்ட அறிவிப்பு ஸஹீஹான அறிவிப்பாக உள்ளது. மேலும் மிகவும் அதிகமாகவும் கூறப்பட்டுள்ளது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபதிஸ் ஸஹாபா தொகுதி 2 பக்கம் 318 ஸிமாக் பின் ஹரஷா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

நான் ஏற்கனவே கூறிய ஒரு விஷயத்தின் ஒரு பகுதியை இங்கும் கூறி விடுகிறேன். அது ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்களுடன் தொடர்புடைய விஷயமாகும். ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் அன்சாரி ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா ஹிஜ்ரத் செய்வதற்கு முன்பு அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். அன்னார் மதீனாவாசியாக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருடன் பல போர்களில் பங்கு பெற்றிருந்தார்கள். அவர்களுக்கு அதற்கான கவுரவம் கிடைத்தது. மிகவும் வீரத்தை வெளிப்படுத்தினார்கள். அவ்வாறே உஹது போரிலும் பங்கு பெறும் நற்பேறு அவர்களுக்கு கிடைத்தது. முஸ்லிம்கள் முதலில் வெற்றி பெற்றுக் கொண்டிருந்தார்கள். பிறகு நிலைமை மாறியது. ஓர் இடத்தை விட்டு விட்டதன் காரணமாக காஃபிர்கள் மீண்டும் தாக்கினார்கள். போர் நிலைமை முஸ்லிம்களுக்கெதிராக திரும்பி போரின் நிலை மாறியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்த சஹாபாக்களுள் ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்களும் ஒருவர் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாக்கும் முயற்சியில் அன்னார் மிகவும் அதிமாக காயமுற்றார்கள். ஆனால் அந்த காயங்கள் ஏற்பட்ட பிறகும் கூட அன்னார் பின்வாங்கவில்லை.

ஒரு முறை நோய்வாய்ப்பட்டபோது தனது தோழரிடம், எனது இரு செயல்களை ஒருவேளை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளலாம். ஒன்று, வீண் விஷயங்களை நான் பேசுவது கிடையாது. மக்களின் முதுகுக்குப் பின்னால் பேசுவது (புறம்பேசுவது) கிடையாது. மக்களுக்குப் பின்னால் அவர்களைக் குறித்து பேசுவது கிடையாது. இரண்டாவது, எந்தவொரு முஸ்லிமிற்கு எதிராகவும் எனது உள்ளத்தில் பகைமையும், வெறுப்பும் கிடையாது என்றார்கள்.

(குத்பா ஜுமுஆ 16 மார்ச் 2018 அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 06–12 ஏப்ரல் 2018 இதழ் எண் 25 தொகுதி 14 பக்கம் 5)

இவரைப் பற்றிய நற்குறிப்பு இங்கு முடிவடைகிறது.

இப்போது சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைப்பேன். அவர்களின் ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன். அவர்களில் ஒருவர் கடந்த நாட்களில் ஷஹீதாக்கப்பட்டவர் ஆவார். அன்னார் சய்யிது ஜலால் சாஹிபின் மகனாகிய பிஷாவர் மாவட்டத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய மஹ்பூப் கான் சாஹிப் ஆவார்கள். அஹ்மதிய்யத்தின் எதிரிகள், நவம்பர் 8 ஆம் தேதி 2020 அன்று காலை 8 மணிக்கு மஹ்பூப் கான் சாஹிப் அவர்களை, பிஷாவரின் ஷேக் முஹம்மதி எனும் கிராமத்தில் (துப்பாக்கியால்) சுட்டு ஷஹீதாக்கி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

கிடைத்த விவரங்களுக்கேற்ப, நவம்பர் 6 ஆம் தேதி அன்று மஹ்பூப் கான் சாஹிப் அவர்கள் பிஷாவரின் குஷ்ஹால் டவுனிலிருந்து தமது கிராமத்திற்கு அருகிலுள்ள ஷேக் முஹம்மதி எனும் கிராமத்தில் வசிக்கும் தனது மகன் வழிப்பேத்தியை சந்திக்கச் சென்றுள்ளார்கள். நவம்பர் 8 ஆம் தேதி திரும்பி வருவதற்காக வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். பேருந்து நிறுத்தத்திற்கு அருகில்தான் வந்திருப்பார்கள். அங்கு அடையாளம் தெரியாத நபர்கள் அவரை பின்தொடர்ந்து வந்து சுட்டுவிட்டனர். ஒரு குண்டு அவருடைய தலையின் பின்பக்கமாக நுழைந்து முன்பக்கமாக வெளியேறி விட்டது. அதன் காரணமாக அன்னார் சம்பவ இடத்திலேயே ஷஹீதாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

சம்பவத்திற்கு பிறகு கொலையாளி தப்பி ஓடிவிட்டான். தப்பியோடிய கொலையாளி ஒருவன் ஆவான். ஷஹீதுடைய வயது 80 ஆகும். மர்ஹூம் அவர்கள் பப்ளிக் ஹெல்த் இன்ஜினியரிங் டிபார்ட்மெண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு officer Superintendent ஆக ஓய்வு பெற்றார்கள். அதன் பிறகு ஓய்வூதியம் பெறுபவராக வாழ்வைக் கழித்தார்கள். ஷஹீதுடைய தந்தை சய்யிது பிலால் சாஹிப் அவர்கள் 1930 ஆம் ஆண்டில் பைஅத் செய்தார்கள். ஷஹீது அவர்கள் பிறப்பிலேயே அஹ்மதியாவார்கள். எண்ணற்ற சிறப்புகளுக்கு சொந்தக்காரர் ஆவார்கள். தஹஜ்ஜுத் தொழுகையை முறையாக தொழக் கூடியவராக, கண்ணியம், அனுதாபம் மற்றும் விருந்தோம்பல் தன்மையிலும் மிகைத்து இருந்தார்கள்.

அல்லாஹ்வின் வழியில் அழைக்கும் பணியில் மிகவும் பித்த நிலையைப் போன்ற ஆர்வமிருந்தது. உண்மை தூதுச் செய்தியை எட்ட வைப்பதில் எப்போதும் முன்னணியில் இருந்தார்கள். எச்சரிக்கையாக இருக்குமாறு கூறப்படும் போதெல்லாம் அவர் ஒரே நிலைபாட்டில்தான் இருந்தார். அதாவது, இப்போது இறைவனுக்கு முன்னால் ஆஜராகும் காலம் வந்து விட்டது. ஷஹாதத்கிடைத்தால் எனக்கு அது நற்பேறு என்று கூறுவார்கள். எவ்வாறிருப்பினும் அவருடைய ஷஹாதத் எனும் இந்த விருப்பமும் நிறைவேறிவிட்டது.

ஷஹீதுடைய மனைவி மிஃராஜ் பேகம் சாஹிபா அவர்களுக்கு கிடைத்த நற்பேறு என்னவென்றால், அவருடைய தந்தை முஹம்மது சயீத் சாஹிப் அவர்களும், சிறிய தந்தை பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களும் 1966 ஆம் ஆண்டில் ஷஹீதானார்கள். இப்பொது இவருடைய கணவருக்கு இந்த நற்பேறு கிடைத்துள்ளது. இவ்வாறு மிஃராஜ் பேகம் சாஹிபா அவர்கள் ஷஹீதுடைய மகளாகவும், ஷஹீதுடைய சகோதரியின் மகளாகவும், ஷஹீதுடைய மனைவியாகவும் உள்ளார்கள்.

மர்ஹூம் தமக்குப் பின்னால் தமது மனைவி மிஃராஜ் பேகம் சாஹிபா உட்பட இரண்டு மகன்களையும், இரண்டு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். மகன்களின் பெயர்கள் முனவ்வர் அஹ்மது, ஃபஸ்ல் அஹ்மது ஆகும். ஸகிய்யா பேகம் மற்றும் வஹீதா பேகம் என்ற இரண்டு மகள்கள் உள்ளனர். இரண்டு மகன்வழிப் பேரனும், ஒரு பேத்தியும், ஆறு மகள் வழிப் பேரனும், நான்கு பேத்தியும் உள்ளனர். அன்னாருடைய இளைய மகன் மைக்ரோ பயாலஜியில் பிஎச்டி படித்துள்ளார்கள். ஆஸ்திரேலியாவில் வசிக்கிறார். இன்னொரு மகன் ஜெர்மனியில் வசிக்கிறார். அவரும் நன்கு படித்துள்ளார். ஆங்கிலத்தில் M.A முடித்துள்ளார்.

ஷஹீதுடைய மகன் முனவ்வர் கான் சாஹிப் கூறுகிறார்: மஹ்பூப் கான் சாஹிப் அவர்கள் தமது பகுதியில் அமைதியை நிலைநாட்ட உழைத்துக் கொண்டிருந்தார்கள். சில சமயங்களில் இரண்டு பிரிவினருக்கு மத்தியில் சண்டை ஏற்படும்போது சமாதானத்தை ஏற்படுத்த தமது இரத்தத்தையும் கூட சிந்தியிருக்கிறார்கள். ஏழைகள், வறியவர்களுக்கு உதவி செய்ய எந்நாளும் ஆயத்தமாக

இருப்பார்கள். மக்கள் தங்களது தேவைகளுக்காக தயக்கமின்றி அன்னாரிடம் வருவார்கள். அன்னார் அவர்களுக்கு உதவி செய்வதற்காக எப்பொழுதும் தம்மிடத்தில் தொகையையும், தானியங்களையும் வைத்திருப்பார்கள். மிகவும் பணிவுள்ளவராகவும், அமைதியான இயல்புடையவராகவும் இருந்தார்கள். மிக்க பொறுமைசாலியாகவும், மற்றவரின் துன்பங்களை உணரக் கூடியவராகவும் இருந்தார்கள். பிறரின் துன்பங்களை உணரக் கூடியவராக இருந்தார்கள். மேலும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் அவர்களுக்கு உதவி செய்ய ஆயத்தமாக இருப்பார்கள். அல்லாஹ் மர்ஹூமுடைய தகுதிகளை உயர்த்திக் கொண்டே செல்வானாக! அவருடைய உறவினர்களுக்கும் அவருடைய நன்மைகளை தொடரச் செய்யும் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா பாகிஸ்தானுடைய முரப்பி ஃபக்ர் அஹ்மது ஃபரக் சாஹிப் அவர்களுடையதாகும். 2020 நவம்பர் 1 ஆம் தேதி மாலை ஆறேகால் மணிக்கு ஒரு சாலை விபத்தில் தமது மகன் இஹ்திஷாம் அப்துல்லாஹ்வுடன் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

தனது மகனுடன் அஹ்மது நகரிலிருந்து வந்து கொண்டிருக்கும்போது விபத்தில் மரணமடைந்துள்ளார்கள். மிகவும் கொடூரமான விபத்தாக இருந்துள்ளது. தந்தையும் மகனும் இறந்து விட்டனர். அல்லாஹ்வின் அருளால் ஃபக்ர் சாஹிப் அவர்கள் மூஸியாக உள்ளார்கள். ஃபக்ர் சாஹிபின் தந்தை ஸைஃபுர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் தாமாக பைத் செய்தார்கள். இவர்களுடைய குடும்பத்தில் அதற்கு முன் வேறு யாரும் அஹ்மதி கிடையாது. 1968 ஆம் ஆண்டு அவர்கள் பைஅத் செய்தார்கள். மேலும் தமது குடும்பத்தின் முதல் அஹ்மதி ஆவார்கள்.

1996 ஆம் ஆண்டு ரப்வா ஜாமிஆ அஹ்மதிய்யாவில் தேர்ச்சி பெற்ற பிறகு, பாகிஸ்தானில் பல்வேறு இடங்களில் தொண்டாற்றும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்துள்ளது. அதன் பிறகு ஃபக்ர் சாஹிப் மேற்கு ஆஃப்ரிக்கா ஐவெரிகோஸ்டுக்கு அனுப்பப்பட்டார்கள். அதன் பிறகு கடந்த 8 ஆண்டுகளாக அஹ்மது நகரில் முரப்பியாக தொண்டாற்றி வந்தார்கள். அவருடைய திருமணம் தாஹிரா ஃபக்ர் சாஹிபாவுடன் நடைபெற்றுள்ளது. இவர் அலி அஸ்கர் சாஹிபின் மகளாவார். இந்த திருமணத்தின் மூலம் இவர்களுக்கு நான்கு மகள்களும், ஒரு மகனும் பிறந்தார்கள். மகன் இஹ்திஷாம் அப்துல்லாஹ் தனது தந்தையுடன் விபத்தில் மரணமடைந்து விட்டார்கள்.

மர்ஹூம் தமது மனைவி, நான்கு மகள்களையும், தாயார் மற்றும் சகோதர சகோதரிகளை தமக்குப் பின்னால் விட்டுச் சென்றுள்ளார்கள். வஜீஹா, அமதுல் ஸபூஹ், ஸம்ரீன் ஃபக்ர், மஹ்ருன் ஃபக்ர் ஆகியோர் அன்னாரின் மகள்கள் ஆவர்.

ஃபக்ர் சாஹிபின் மனைவி தாஹிரா சாஹிபா எழுதுகிறார்கள்: எங்களுடைய திருமணம் நடைபெற்றபோது, முரப்பி சாஹிப் குஷாப் எனும் ஒரு கிராமத்தில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். நான் அங்குள்ள சென்டருக்கு சென்றபோது முரப்பியின் மனைவியுடைய கடமைகள் குறித்து எனக்குக் கூறினார்கள். நீங்களும் என்னுடன் வக்ஃப் ஆவீர்கள். நீங்களும் ஜமாஅத் பணிகளில் முந்திக் கொண்டு பங்கு பெற வேண்டும் என்று தர்பிய்யத் வழங்கினார்கள். அதற்குப் பிறகு பதைன் என்ற இடத்திற்கு பணியிட மாற்றம் ஆனார்கள். முரப்பி சாஹிப் எனக்கு முன்பே சென்று விட்டார்கள். நான் சில காலத்திற்குப பிறகு சென்றேன். நான் சென்றடையும் தகவலை முன்பே அவர்களுக்கு தெரிவித்திருந்தேன். ஆனால் நான் அங்கு சென்றடைந்தபோது, முரப்பி சாஹிப் அங்கு சென்டரில், வீட்டில் இல்லை. நான் வெளியே வெயிலில் உட்கார்ந்திருந்தேன். பள்ளிவாசலில் அமர்ந்திருந்தேன். ஒரு முஅல்லிம் சாஹிபின் மனைவி நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். அவருக்கு இரத்தம் கொடுப்பதற்கு முரப்பி சாஹிப் சென்றுள்ளார் என தெரிய வந்தது. அவர் திரும்பி வந்ததும் நான் அவர்களிடம், முழு நாளும் வெளியில் நான் உட்கார்ந்திருந்தேன். நான் வருவது உங்களுக்கு தெரியுமே! நான் நீண்ட பயணம் செய்து வந்துள்ளேன் என்றும் கூறினேன். அதற்கு அவர்கள், அந்த வேலையும் மிக முக்கியமானதாக இருந்தது என்று கூறியவாறு இவ்வாறு தியாகம் செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

ஐவரிகோஸ்ட் சென்றபோது அங்கும் கித்மதே கல்க் உடைய பணியை அதிகமாக செய்து வந்தார்கள். மார்க்கத்திற்கு தொண்டாற்றும் பணியுடன், எப்பொழுதும் தனது மனைவி மக்களை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கி வந்தார்கள். அவருடைய மனைவி கூறுகிறார்: ஒரு முறை எனது உடல் நிலை மிக மோசமானது. மகள் பிறக்க இருந்த நேரம். மருத்துவ முகாம் பணி சம்பந்தமாக முரப்பி சாஹிப் சென்றிருந்தார். (எனது) உடல் நிலை மிக மோசமாக உள்ளது என மருத்துவர் கூறியிருந்தார். ஆயினும் முரப்பி சாஹிப் என்னை விட்டு விட்டு சென்று விட்டார். அல்லாஹ் அருள் செய்தான். வாழ்வை அர்ப்பணித்தவருடைய மனைவி ஆவீர் நீங்கள். உங்களுக்கு ஒன்றும் ஆகாது என்று மட்டுமே என்னிடம் கூறினார்.

சுருக்கம் என்னவென்றால், முரப்பி சாஹிப் அவர்கள் ஒவ்வொரு விவகாரத்திலும் உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினார்கள். விருந்தோம்பல், படைப்பினத் தொண்டு, மார்க்கத் தொண்டு ஆகியவை செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். அறிந்தவர் அறியாதவர் என அனைவரையும் நேசிக்கக் கூடியவராக இருந்தார்கள். குழந்தைகளுடன் நட்பு ரீதியான தொடர்பு இருந்தது. வீட்டு விவகாரமாக இருந்தாலும் சரி அல்லது குடும்ப விவகாரமாக இருந்தாலும் சரி, ஜமாஅத் விவகாரமாக இருந்தாலும் சரி அல்லது ஜமாஅத் அல்லாத நபர்களின் விவகாரமாக இருந்தாலும் சரி, மிக அழகிய முறையில் புரிய வைப்பார்கள். குழந்தைகளிடத்திலும், நீங்கள் வாழ்வை அர்ப்பணித்தவரின் சந்ததிகளாவீர்; ஒரு முரப்பியுடைய பிள்ளைகளாவீர். ஆகவே எப்பொழுதும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்; தனது அழகிய முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டும் என்று கூறுவார்கள்.

ஐவரிகோஸ்டின் முரப்பி பாஸித் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: ஃபக்ர் சாஹிப் அவர்கள் ஐவரிகோஸ்டின் முரப்பியாக வந்தார்கள். அவர் மிக எளிதில் பழகக்கூடியவராகவும், மலர்ந்த முகமுடையவராகவும், நற்குணங்களுக்கு சொந்தக்காரராகவும் இருந்தார்கள். அன்னாரிடத்தில் காணப்பட்ட மிக முக்கிய விஷயம், உள்ளத்தை ஈர்க்கக்கூடிய அவருடைய பேச்சாகும். அவர் எவரை சந்தித்தாலும் தன் பக்கம் ஈர்த்து விடுவார். ஐந்து வருடங்களாக ஓமே ரிஜனில் முபல்லிக் ஆக தொண்டாற்றினார். அவரிடத்தில் காணப்பட்ட நற்பண்புகள் மற்றும் அனுதாபத்தின் காரணமாக ஒவ்வொருவரும் அவருடன் அதிக தொடர்பு கொண்டிருந்தார். எப்பொழுதும் அவரைக் குறித்து பேசி வந்தார்கள். ஆண்டு மாநாட்டுக்கு செல்வதற்காக சில ஏழைகளுக்கு மறைமுகமாக பொருள் உதவி செய்து வந்தார்கள். அவர் இங்கு இருக்கும்போது அவருடைய ரீஜன் வருகையில் முதலிடத்தில் இருந்தது என்று கூறுவார்கள்.

ஹாரூன் சாஹிப் என்ற அங்குள்ள முஅல்லிம் அவர் கூறுகிறார்: இரண்டரை வருடம் நான் அன்னாருடன் பணியாற்றியுள்ளேன். சகோதரரைப் போன்று என்னை கவனித்துக் கொண்டார்கள். அன்னாரிடத்தில் நான் கண்ட முக்கியமான சிறப்பம்சம் என்னவென்றால், மிக மிக அதிகமாக உழைக்கக் கூடியவராக இருந்தார்கள். மிக உத்வேகமான முபல்லிக் ஆக இருந்தார்கள். ஒவ்வொரு வேலையையும் பொறுப்புடனும், ஆர்வத்துடனும் செய்து வந்தார்கள். வேலையை மிக விரைவில் முடிக்க வேண்டும் என்ற தீவிர ஆவல் இருந்தது. அது தப்லீக் வேலையாக இருந்தாலும் சரியே!

EDITOR
Moulavai.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavai. ABDUR RAHMAN THAIR
Mobile : + 91 96774-14441
E-mail : subeditortamil@gmail.com
editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 17 December 2020 Issue No. 51

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

சந்தாவை வசூலிக்கக்கூடிய பணியாக இருந்தாலும் சரியே! ஆண்டு மாநாட்டுக்கான ஆயத்தப் பணியாக இருந்தாலும் சரியே! அவருடைய தப்லீக்கின் நிலை எப்படி இருந்தது என்றால் ஒவ்வொரு கிராமத்திலும் ஜமாஅத்தின் தூதுச் செய்தி வெகு விரைவில் சென்றடைய வேண்டும் என விரும்பினார்கள். மர்ஹூமுடைய அந்தஸ்தை அல்லாஹ் உயர்த்துவானாக. அவருடைய மகள்கள் மற்றும் மனைவிக்கு பாதுகாவலனாகவும், உதவியாளனாவும் இருப்பானாக. இனிவரும் காலங்களில் அவர்களை எல்லா துன்பங்களிலிருந்தும் கஷ்டங்களிலிருந்தும் காப்பாற்றுவானாக.

மூன்றாவது ஜனாஸா, முரப்பி ஃபக்ர் அஹ்மது ஃபரக் சாஹிபின் மகன் இக்திஷாம் அஹ்மது அப்துல்லாஹ்வுடையதாகும். நான் ஏற்கனவே கூறியதுபோன்று இவரும் தனது தந்தையுடன் சாலை விபத்தில் மரணமடைந்து விட்டார். அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே நவ்வின் அருளுக்குரிய திட்டத்தில் இணைந்திருந்தார். மேலும் இவர் தற்போது முதல் வருடத்தில் படித்துக் கொண்டிருந்தார். இவர் மூஸி கிடையாது. ஆனால் வஸிய்யத் படிவத்தை நிரப்பியிருந்தார். அதை கொடுத்திருக்கவில்லை. எவ்வாறிருப்பினும் அந்தப் படிவம் நிரப்பப்பட்டிருந்தால் கார்பர்தாஸ் அலுவலகம் அதன்மீது நடவடிக்கை எடுக்கலாம்.

இவருடைய தாயார் கூறுகின்றார்: என்னுடைய மகன் பல்வேறு சிறப்பம்சங்களக்கு சொந்தக்காராக இருந்தார். நல்லவர், கட்டுப்படக்கூடியவர், வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்திருந்தார். தொழுகைகளை பேணக்கூடியவராக இருந்தார். குத்தாமுல் அஹ்மதிய்யா ஸயீம் சாஹிபின் ஒவ்வொரு கட்டளையின்படியும் செயல்படக்கூடியவராக இருந்தார். மிக மகிழ்ச்சியுடனும், முறையாகவும் டியூட்டி கொடுத்து வந்தார். எந்த நாளில் மரணமடைந்தாரோ அந்த நாளிலும் பள்ளிவாசலில் டியூடி கொடுத்தார். அல்லாஹ் மர்ஹூமுடன் மன்னிப்புடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

அடுத்த ஜனாஸா, ரப்வாவைச் சார்ந்த மியான் அப்துல் லதீஃப் சாஹிபின் மகன் மதிப்பிற்குரிய டாக்டர் அப்துல் கரீம் சாஹிப் அவர்களுடையதாகும். இவர் State bank of Pakistan ல் retired economics advisor ஆக இருந்தார். நவம்பர் **14** ஆம் தேதி **92** வயதில் மரணமடைந்தார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி மவ்லவி முஹம்மது அலி சாஹிபின் மகன் வழிப்பேரனாவார். காதியான் தஃலீமுல் இஸ்லாம் காலேஜுடைய முதல் பேட்ஜில் இருந்தார். இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு காலேஜ் லாகூருக்கு மாற்றப்பட்டபோது தஃலீமுல் இஸ்லாம் காலேஜுடைய மாணவர் என்ற முறையில் பஞ்சாப் யுனிவர்சிட்டியில் M.A படித்தார். அப்பொழுது முழு யூனிவெர்சிடியில் தஃலீமுல் இஸ்லாம் காலேஜுடைய ஒரே மாணவராக இருந்தார்கள். பிறகு State bank of Pakistan உடைய Schlorship Gerge Washington University ல் economec ல் Phd படிப்பதற்காக அமெரிக்காவுக்கு சென்றார்கள். அங்கு ஃபஸ்ல் பள்ளிவாசலில் அவர் தங்குவதற்கான ஏற்பாடு இருந்தது. அங்கு பணிகளை முடித்த பிறகு தப்லீக் பணிகளில் மூழ்கி விடுவார்.

டாக்டர் சாஹிப் அவர்கள் பாகிஸ்தானை அதிகமாக நேசித்தார்கள். அவர் தனது கேரியரில் உலக வங்கி போன்ற உலகளாவிய துறையுடன் நிரந்தரமாக பணியாற்றிய பிறகும் கூட பாகிஸ்தானில் இருந்து கொண்டே எப்பொழுதும் தமது பணிகளை தேர்ந்தெடுப்பார். மிக நீண்ட காலமாக State bank of Pakistan–ல் பணியாற்றினார். ஆலோசகராக ஓய்வு பெற்றார்கள். தம்முடைய காலத்தில் இவர் IMF மற்றும் Asian development bank போன்ற பல்வேறு துறை சார்ந்த நாட்டுப் பணிகளையும், பிற பணிகளையும் வெற்றியுடன் முழுமை செய்துள்ளார்கள். நிதி அமைச்சரவையிலும் சில காலம் பணியாற்றினார்கள். அவருடைய கண்காணிப்பில் ஒரு கூட்டாச்சி பட்ஜெட்டும் தயாரானது. IMF சார்பாக இரண்டு வருடங்களுக்கு சூடான் அரசாங்கத்தின் பொருளாதார விவகாரங்களுக்கான தீர்வு காண கர்தூமுக்கும் அனுப்பி வைக்கப்பட்டார்கள். State Bank லிருந்து ஓய்வு பெற்ற பின் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்காக ரப்வாவில் வசிப்பதற்கு முன்னுரிமை வழங்கினார்கள்.

பொருளாதாரம் மற்றும் மார்க்கம் தொடர்பாக விவகாரங்கள் முன்வரும்போது அவரிடம் ஆலோசனை கேட்கப்பட்டு வந்தது. கமிட்டிகளிலும் அவரிடம் நான் ஆலோசனை கேட்டு வந்துள்ளேன். சிறந்த ஆலோசகராக இருந்தார். மேலும் சிறந்த கட்டுரைகளை எழுதி வந்தார். அவருடைய ஒவ்வோர் ஆய்வும் மிக ஆழமான கண்ணோட்டத்தை கொண்டதாக இருந்தது. அதனுடைய செயல் முறையை, தீர்வை அவர் எடுத்து வைத்து வந்தார். அவருடைய சில நூல்களும் உள்ளன. அவற்றுள், இஸ்லாத்தின் அடிப்படை விஷயங்கள் என்ற நூல் ஆங்கிலத்தில் உள்ளது. இஸ்லாமிய வாழ்வியல் தத்துவமும் பொருளாதார அடிப்படையும் என்ற நூலும் ஆங்கிலத்தில் உள்ளது. தடுக்கப்பட்டுள்ள வட்டி என்ற நூல் உருதுவில் உள்ளது. ரிஸ்கை சம்பாதித்தல் எனும் நூலும் உருதுவில் உள்ளது.

**1989** ஆம் ஆணடு ஓய்வு பெற்ற பின்னர் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க அர்ப்பணித்து Tnshkent யூனிவர்சிட்டியில் பொருளாதார ஆசிரியர் பணிக்காக உஸ்பெகிஸ்தான் சென்றார். அங்கு ஆறு மாதம் வரை தொண்டாற்றினார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அடகு வைத்தல் மற்றும் வட்டி விவகாரங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ள ஒரு கமிட்டியை உருவாக்கியிருந்தார்கள். ஆலிம்களையும் வல்லுனர்களையும் உள்ளடக்கிய கமிட்டியாக அது இருந்தது. அதனுடைய ஒரு சப் கமிட்டியும் இருந்தது. மர்ஹூம் அதனுடைய உறுப்பினராக இருந்தார்கள். அதில் சிறிது காலம் நானும் அவருடன் பணியாற்றியுள்ளேன்.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று மிக ஆழிய ஞானத்துடன் ஒவ்வொரு விஷயத்தையும் பேசுவார்கள். தக்க உறுதியான சான்றுடன் பேசுவார்கள். வட்டியைக் குறித்து அவர் எனக்கு பல கட்டுரைகளையும் எழுதி அனுப்பியுள்ளார்கள். அவை சிறந்த கட்டுரைகளாக உள்ளன. இன்ஷா அல்லாஹ் அவற்றின் மீது இன்னும் ஆய்வு மேற்கொள்ளப்படும். வட்டிக்கெதிராக எடுத்து வைக்கப்படும் திட்டத்தில் இனி வரும் காலத்தில் இவருடைய ஆலோசனைகளும் இணைக்கப்படலாம். அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாருடைய நன்மைகளின்படி செயல்படும் நற்பாக்கியத்தை அவருடைய சந்ததிகளுக்கும் வழங்குவானாக.

தமிழில்: மவ்லவி APA தாரிக் அஹ்மது சாஹிப்

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad